**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.173/2013**

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு பிப்ரவரி மாதம் 03 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : உலகநாதன் | மதம் | : இந்து |
| த/பெ | : ஏகாம்பர முதலி | ஜாதி | : -- |
| வயது | : 50 | கிராமம் | : புஜ்ஜிரெட்டிபள்ளி |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

03.02.2026.

**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு 3 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

12. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 4 பட்டா எந்த வருடம் கொடுக்கப்பட்டது என்பது சொல்ல முடியுமா என்றால் 2000ம் வருடம் ஆகும். தாவா சொத்தை என் அப்பா எந்த வருடம் கிரையம் வாங்கினார் என்றால் 1999 ஆகும். என் அப்பா யாரிடமிருந்து கிரையம் வாங்கினார் என்றால் ரங்கா ரெட்டியிடம் இருந்து கிரையம் வாங்கினார். ரங்கா ரெட்டி பெயரில் எதாவது பட்டா இருந்ததா என்றால் இருந்தது. ரங்கா ரெட்டி பெயரில் இருந்த பட்டா எண் சொல்ல முடியுமா என்றால் தெரியாது. ரங்கா ரெட்டிக்கு முன்பு தாவா சொத்தை யார் வைத்திருந்தனர் என்றால் ஏழுமலை வைத்திருந்தார். ஏழுமலை பெயரில் ஏதாவது பட்டா இருந்ததா என்பதை பார்த்தேனா என்றால் தெரியாது. தாவா சொத்து குறித்து எந்தவித பட்டாவும் ரங்கா ரெட்டி பெயரிலும் ஏழுமலை பெயரிலும் இல்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

13. பட்டா விசாரணைக்காக வருவாய் கோட்டாட்சியர் அறிவிப்பு அனுப்பி விசாரணை நடந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. பட்டாவை ரத்து செய்ய 3 முதல் 8 வரை பிரதிவாதிகள் கொடுத்த மனு இன்றுவரை விசாரணை நிலுவையில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள 1996ம் வருட ஏழுமலை முதலியாரின் ஆவணத்தில் 2ம் இலக்கத்தில் புல எண்.96/13ல் 78 செண்டில் 40 செண்ட் என சொல்லப்பட்டுள்ளது என்றால் 78 செண்ட் என்றுதான்

உள்ளது. இந்த வழக்கில் எத்தனை வரி ரசீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் வழக்கறிஞருக்குதான் தெரியும். நான் ஒரே ஒரு ரசீதை வழக்கு தாக்கல் செய்வதற்காக மட்டும்தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் வரி கட்டியுள்ளேன்.

14. இந்த வழக்கில் வழக்கு மூலமே எழவில்லை என்பதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் எந்த தகராறும் செய்யவில்லை என்பதால் வழக்கு மூலமே எழவில்லை என்றால் சரியல்ல. 1966ம் வருட ஆவணத்தை மட்டும் தாக்கல் செய்துவிட்டு பிரதிவாதிகளின் உரிமையை காட்டும் 02.06.1974ம் தேதியிட்ட ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு வழக்கு சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்று தெரிந்து கொண்டு 3 முதல் 8 பிரதிவாதிகளை பழிவாங்க வேண்டி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் எனக்கு வழக்கு சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல. என் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)